AUTHOR: No author available SECTION: NEWS PAGE: 1,13 PRINTED SIZE: 216.00cm² REGION: KL
MARKET: Malaysia PHOTO: Full Color ASR: MYR 1,414.00 ITEM ID: MY0062421377



04 FEB, 2025

# PM denies 14pct electricity tariff hike claim

Makkal Osai, Malaysia

## மின்சாரக் கட்டணம்

# 14% அதிகரிப்பா?

### பிரதமர் மறுப்பு

கோலாலம்பூர், பிப். 4-

தீபகற்ப மலேசியாவில் அமல்படுத்தப்படும் மின்சாரக் கட்டண உயர்வு பொதுமக்களுக்குப் பாதகமாக இருக்காது. மிகச்சிறிய அளவில் மட்டுமே அந்த உயர்வு இருக்கும். 14 விழுக்காடு இல்லை என்பதை அவர் திட்டவட்டமாகக் கூறினார்.



நடப்பு விலையை அடிப்படையாகக் கொண்டு 6 மாதங்கள் ஆய்வு செய்யப்படும். எனவே இந்த மின்சாரக் கட்டணம் மிகப் பெரிய அளவில் இருக்காது.

பக்கம் 13

## முதல் பக்கத் தொடர்ச்சி

### மின்சாரக் கட்டணம்...

சிறிய அளவில் மட்டுமே இருக்கும் என்று அவர் சொன்னார்.

குறைகளைக் கேட்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். முடிவு என்பது சரியான ஒன்றாக இருக்க வேண்டும். எனவே இதுகுறித்து மக்கள் குழப்பமடைய வேண்டாம் என்று மலேசிய சீன வர்த்தகத் தொழில்சபை ஏற்பாட்டில் நடைபெற்ற சீனப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் தெரிவித்தார்.

புதிய மின்சாரக் கட்டணம் 2025 ஜூலை 1ஆம் தேதி அமலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்கள் சிறிய லாபத்தைப் பெற்றாலும் அதிலிருந்து ஒரு சிறிய தொகையை மின்சாரக் கட்டணத்திற்கு வழங்கலாம் என்று அவர் வேடிக்கையாகச் சொன்னார்.

Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.